பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 28 செவ்வாய்க்கிழமை 14.12.2021 கதிர் 267

## மந்திகை வைத்தியசாலையில் இன்று எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் உணவு தயாரிப்பு இடத்தில் இன்று எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இன்று காலை 6.45 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. ☞2

## நானாட்டான் பிரதேச சபையின் 'பட்ஜட்' குழப்பத்துக்கு மத்தியில் நிறைவேற்றம்

மன்னார் மாவட்டம், நானாட்டான் பிரதேச சபையின்2022ஆம்ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று குழப்பங்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின்2022ஆம்ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட சபை அமர்வு தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் இன்று காலை 9.30 மணியளவில் நானாட்டான் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாகியதில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும், எதிர்த்தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

எனினும், வரவு - செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பு பகிரங்கமாக நடைபெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் மேலதிகமான ஒரு வாக்கால் நிறைவேறியது.

ஆதரவாக தவிசாளர் ☞2

### வடக்கு மாகாண ஆளுநரின் கூட்டத்தில்

## தமிழ்மொழி புறக்கணிப்பால் சிறிதரன் எம்.பி. வெளிநடப்பு



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஆளுநர் கூட்டிய வடக்கு மாகாணக் கூட்டத்தில் தமிழ் மொழிக்கு இடமே இல்லை என்றால் இந்தக் கூட்டத்தில் இருக்க நான் விரும்பவில்லை எனத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வெளியேறினார்.

வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் புதிய ஆளுநரால் முதன் முதலாக கூட்டிய கூட்டம் இன்று கைதடியில் உள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது கலந்துகொண்ட ஆளுநர் முதல் பிரதம செயலாளர், அதிகாரிகள் என அனைவருமே ஆங்கிலத்தில் மட்டுமே உரையாற்றிய சமயம் தமிழில் உரையாற்றாத சந்தர்ப்பத்தில் அதற்கான தமிழ் மொழி பெயர்ப்பை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்தார். ☞2

# சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடுவதா?


### குழப்பத்தில் ராஜபக்ஷ அரசு



**நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை நாடும் விவகாரத்தில் இலங்கை அரசு 'மதில் மேல் பூனை' நிலைப் பாட்டிலேயே இருந்து வருகின்றது.**

**தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்த வழியென அரசிலுள்ள ஒரு சிலரும், அவ்வாறானதொரு தேர்வுக்கு அரசு சென்றுவிடக்கூடாது என மற்றுமொரு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.** ☞2

## மணிக்கு விக்கி வக்காலத்து



(ந.லோகதயாளன்)

கட்சி சார்பான முரண்பாடுகளால் யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்து ஒரு தகுதி வாய்ந்த மாநகர மேயரை இழக்க இடமளிக்காதீர்கள்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்களிடம் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணித் தலைவரும் முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சருமான யாழ்ப்பாணம் ☞2



## மன்னார் கடலில் காணாமல்போன 2ஆவது மீனவரும் சடலமாக மீட்பு!



மன்னார், கோந்தைப்பிட்டி கடற்பரப்பில் யாழ்., பருத்தித்துறையைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் காணாமல் போன நிலையில் நேற்றுக் காலை ஒரு மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், மற்றைய நபர் இன்று ☞2

## விபத்தில் மதகுரு படுகாயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, குட்செட்வீதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் மதகுரு ஒருவர் படுகாயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். ☞2


## வடமராட்சியில் விரிவுரையாளர் வீட்டில் வெடித்துச் சிதறியது எரிவாயு அடுப்பு!

### மனைவி காயம்



யாழ்., வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியதால் விரிவுரையாளரின் மனைவி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமை ☞2



## நாகேஸ்வரன் காலமானார்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் இன்று ☞2

## மந்திகை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் நேரில் சென்று விசாரணை களை முன்னெடுத்தனர்.

## வடமராட்சியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றும் அ.பௌநந்தி வீட்டிலேயே இந்தச் சம்பவம் இன்று காலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வழமை போன்று இன்று காலையில் விரிவுரையாளரின் மனைவி உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது. அதன்போது வெடித்துச் சிதறிய அடுப்பின் பாகம் ஒன்று விரிவுரையாளரின் மனைவியின் தலையில் பட்டதில் அவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

அதேவேளை, அடுப்பு வெடித்துச் சிதறிய அதிர்வில் சமயலறையின் சீலிங் சீட்டும் வெடித்துள்ளது.

எரிவாயு சிலிண்டர் நேற்றே மாற்றப்பட்டிருந்தது என விரிவுரையாளர் தெரிவித்துள்ளார்.

## நானாட்டன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட கூட்டமைப்பின் 7 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவருமாக 8 பேர் வாக்களித்தனர்.

எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், உதய சூரியன் உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

## தமிழ்மொழி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு பலன் கிட்டாது தொடர்ந்தும் ஆங்கிலத்தில் மட்டுமே உரையாடல் நீடித்தது. இதனால் விரக்தி அடைந்த நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் மக்களைக் கொண்ட மாகாண சபையில் இன்று தமிழ் மொழியே இல்லாத நிலைமை. எமது போராட்டம் முதல் எமது மக்களின் அடிப்படை உரிமைகள் வரையில் மொழிரீதியானது. அதேநேரம் இந்த மொழிக்காகவும் எத்தனை ஆயிரம் மக்களை இழந்தோம்; எவ்வளவு சொத்துக்களை இழந்தோம். அதேநேரம் தமிழ் மக்களுக்கான தனி மாகாணமாக தற்போது எஞ்சியிருக்கும் வடக்கு மாகாணத்தில் கோரிக்கை விடுத்தும் தமிழ் மொழிக்கு இடம் இல்லாதபோது இந்தக் கூட்டத்தில் எதற்காக நான் பங்குகொள்ள வேண்டும்? இதனால் இந்தக் கூட்டத்தில் தொடர்ந்தும் பிரசன்னமாகியிருக்க நான் விரும்பாத காரணத்தால் இந்தக் கூட்டத்தில் இருந்து வெளியேறுகின்றேன் என்று தெரிவித்துவிட்டு வெளிநடப்புச் செய்தார்.

## மணிக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதால் மேயர் வி.மணிவண்ணனை வெளியேற்றலாம் என்ற எண்ணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை நான் அறிவேன். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதால்தான் இவ்வாறான சிந்தனைகள் மேலோங்குகின்றன.

யாழ் மக்களின் நலன் பற்றியோ, வருங்காலம் பற்றியோ சிந்திக்காது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

மணிவண்ணன் எங்கள் கட்சி உறுப்பினர் அல்லர். ஆனால், அவர் மக்கள் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டவர். தமிழ் மக்கள் சிந்தனையைத் தகுந்த விதத்தில் உள்நாட்டவர்களிடமும் வெளிநாட்டவர்களிடமும் கொண்டு செல்லக்கூடியவர்.

அவரின் திறனும் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மற்றைய உறுப்பினர்கள் எத்தனை பேரிடம் இருக்கின்றது என்பதை உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறும் கட்சி சார்பான முரண்பாடுகளால் ஒரு தகுதி வாய்ந்த மாநகர மேயரை இழக்க நாங்கள் இடமளிக்கக்கூடாது.

இந்தக் கால கட்டம் நெருக்கடி மிக்கது. அறிவு, ஆளுமை, அதிகாரம் கொண்டவர்களை நாங்கள் பதவி இழக்கச் செய்தோமானால் அரசின் கரவான நடவடிக்கைகளைக் கண்டிக்க முடியாமல் போய்விடும்.

எனக்கு மணிவண்ணனைத் தனிப்பட்ட முறையில் அதிகம் தெரியாது. ஆனால், அவரின் செயல்கள் பேச்சுக்கள் அவரை எனக்கு அடையாளப்படுத்தியுள்ளன.

தயவு செய்து பதவியில் இருக்கும் மாநகரமேயரைக்கட்சிக்காரணங்களுக்காக வெளியேற்றாதீர்கள் என்று அனைத்து யாழ். மாநகர சபை உறுப்பினர்களிடமும் அன்பான கோரிக்கை

## விபத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இருந்து குட்செட் வீதி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் குட்செட் பகுதியில் இருந்து நகர் நோக்கி பயணித்த ஓட்டோவும் குட்செட் வீதியில் அமைந்துள்ள கருமாரியம்மன் ஆலயத்தின் அருகே மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த திருகோணமலையைச் சேர்ந்த கேதீஸ்வரன் (வயது - 41) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (100)

## சர்வதேச நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தால் முன் வைக்கப்படும் நிபந்தனைகளை நிறைவேற்ற முற்பட்டால் அது உள்நாட்டில் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்து, ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் என்பதே, 'வேண்டாம்' எனவலியுறுத்தும் தரப்பின் கருத்தாக உள்ளது.

ஆனால் இந்தியா, ஜப்பான், சீனா உள்ளிட்ட நாடுகள்கூட இலங்கைக்குப் பாரிய தொகை கடன்களை வழங்குவதற்கு தயக்கம் காட்டும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே ஒரே வழி எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் நெருக்கடி நிலை உருவாகும் எனவும் 'வேண்டும்' என வலியுறுத்தும் தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றிரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஐ.எம்.எப். விவகாரம் பற்றி ஆராயப்பட்டது. எனினும், இறுதி முடிவு எட்டப்படவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பில் கடும் குழப்பத்தில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னார் கடலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று தர்ஷன் (வயது - 19) என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில், செந்தூரன் (வயது - 28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாகேஸ்வரன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை கொழும்பு வெள்ளவத்தையில் காலமானார். அவருக்கு வயது 69.

இவர் சிலகாலங்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தார்.

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரை அறங்காவலரான அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித் தொகுப்பாளரும் அறிவிப்பாளருமாவார். இந்து சமய நிகழ்வுகளில் ஆர்வமுடன் பங்குபற்றிய சிறந்த பேச்சாளர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் சிறப்புப் பட்டதாரி என்ற பெருமையைப் பெற்றவர்.

எப்போதும் கனிவாகப் பேசும் நாகேஸ்வரன் தமது பல்கலைக்கழக மாணவப் பருவத்தில் இருந்தே தமிழ் விவாத அரங்குகள், இலக்கிய மேடைகள், கதாப் பிரசங்க அரங்குகள், கோவில் திருவிழா நேர்முக வர்ணனைகள் எனத் தம்மை ஈடுபடுத்தியவர். தமது அழகு தமிழ் சொல்லாடலால் பலரின் மனதையும் கவர்ந்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினர்.

அவரின் பூதவுடல் கொழும்பு கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில் இன்றும், நாளையும் அஞ்சலிக்கு வைக்கப்படும். நாளை மாலை இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்
செம்மண்
73 ஆவது இதழ்
வெளிவந்துவிட்டது
வாசித்துவிட்டீர்களா?
- வலியின்றி உயிர் மாய்ப்பு
- பிரியந்த குமாரவைக் கொன்றவர்களும் கறுப்பு ஜூலைக் காடையர்களும்...!
- உவர் இப்ப ஆரோட நிக்கிறார்...?
- தப்பிப் பிழைக்குமா தலை?
- ஓயாது பிழை சொல்வதே பெண்ணின் அடையாளமா?
மேலும் பல சுவையான அம்சங்களுடன்
உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்
076 443 8622



காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir
நானும் சொல்கிறேனே.....!
✓ காலைக்கதிர் வார இதழின் நானும் சொல்கிறேனே என்னும் இந்தப் பகுதியில் நாங்கள் தரும் விடயத் தலைப்பினூடாக உங்களது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.
✓ சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு சிறப்புப் பரிசுகளுமுண்டு!



இந்த வாரத்துக்கான தலைப்பு
யாருக்கும் பொறுப்பில்லை!
உங்கள் எழுத்துக்களை எதிர்வரும் 15.12.2021 புதன்கிழமைக்கு முன்னர் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறையினூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்
நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீனவருக்கான சீனாவின் பரிவு

'பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுவது' என்பார்கள். அப்படிப்பட்ட வேலையைத்தான் செய்து கொண்டிருக்கின்றது ஜனாதிபதி கோட்டாபயவின் கொழும்பு ஆட்சிப்பீடம்.

பொருளாதார நெருக்கடியில் மூழ்கி, கடனிறுக்க வழியின்றி, பரிதவித்து நிற்கும் இலங்கைக்கு முதுகு கொடுக்க முன்வந்திருக்கின்றது நமது அயல் தேசமான இந்தியா.

வேறு வழியின்றி, உதவிக்கு இந்தியாவின் காலில் போய் விழுந்த ஆட்சியாளர்கள், மறுபுறத்தில் இந்தியாவுக்கு கால்தடம் போடும் வேலையையும் கனகச்சிதமாக முன்னெடுக்கின்றனர் என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

இதுவரை பட்ட கடனுக்கான தவணைப் பணக் கொடுப்பனவும் கொழும்பு ஆட்சிப் பீடத்தை இன்று இறுக்கும் விடயங்களில் பிரதானமானது. அப்படிச் செலுத்தப்பட வேண்டியது கடன் தொகையில் – கடப்பாட்டில் – கணிசமானது சீனாவிடம் பட்ட கடனுக்காக தவணைக் கொடுப்பனவுகளாகும்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிகளைப் புரிந்து கொண்டு, அந்தக் கடன் மீள் செலுத்துகையில் தாராள விட்டுக்கொடுப்புகளைச் செய்ய சீனா தயாரில்லை. மாறாக கழுத்தைப் பிடித்து நெருக்கி, உரிய காலத்தில் நிலுவைகளை வசூலிப்பதில்தான் – கறப்பதில்தான் – பீஜிங்கின் கவனம் முழுமையாக உள்ளது.

ஆனால், மறுபுறத்தில், இந்தியாவோ, இலங்கையின் நெருக்கடிகளைப் புரிந்து கொண்டு அதற்கு உதவும் திட்டங்களை முன்னெடுக்க முயல்கின்றது.

அத்தகைய இந்தியாவின் பகைமை நாடு போல செயற்படும் சீனா, இந்தியாவுக்கு மிக நெருக்கமான இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் காலூன்றுவதற்கு இடமளித்து – வெற்றிலை வைத்து – கொழும்பு நடந்து கொள்கின்றது.

இது கொழும்பு அரசின் நியாயமற்ற போக்கின் வெளிப்பாடன்றி வேறில்லை.

ஏற்கனவே, தமிழக – இலங்கை மீனவர்களிடையே அவர்களின் வாழ்வாதாரங்களை ஒட்டி சச்சரவுகள், பிணக்குகள், முரண்பாடுகள், இழுபறிகள் உள்ளன.

அதற்குள் சீனத் தரப்பு முறையற்ற விதத்தில் தலையீடு செய்வதற்கு வாய்ப்பளிப்பது போன்று இலங்கை மீனவர்களுக்கு – வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு – சீனாவின் உதவி மற்றும் நிவாரண நடவடிக்கைகள் என்ற பெயரில் விவகாரங்கள் கட்டவிழ்கின்றன.

இந்தியத் தரப்போடு –இந்திய மீனவர்களோடு – முரண்பட்டு நிற்கின்றனர் வடக்கு, கிழக்குத் தமிழ் மீனவர்கள்.

இந்திய மீனவரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மீனவர்களுக்கு உதவுகின்றோம் என்ற பெயரில் இந்த விவகாரத்துக்குள் சீனா உள்நுழைய இடமளிக்கப்பட்டிருக்கின்றது.

இன்று யாழ் வரும் சீனத் தூதுவர் வேட்டிகட்டி நல்லூர் ஆலயத்துக்குச் செல்வார் என்று ஒரு கதை அடிபடுகின்றது.

தமிழர்களின் கலாசார உடைகளுடன் – பழக்கவழக்கங்களுடன் – வந்து தமிழர்தம் சிந்தை கவரும் சீனாவின் கபடத் திட்டம் இது.

வடக்கு, கிழக்குத் தமிழ் மீனவர்கள் உட்பட வடக்கு, கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் அனைவருக்கும், இந்திய – சீன பலப்பரீட்சைக்கான தளமாக – மையமாக – தமிழர் தாயகம் மாறாமல் பார்த்துக்கொள்வது கடமையாகும்.

## விவசாயத்துறை அமைச்சின் பொறுப்புக்கள் இராணுவத்துக்கு கையளிக்கப்படவில்லை

### மஹிந்தானந்த உத்தரவாதம்



அரசாங்கத்தின் சிறந்த திட்டங்கள் ஊடகங்களில் தவறான முறையில் சித்திரிக்கப்படுகின்றன. விவசாயத்துறை அமைச்சின் பொறுப்புக்கள் இராணுவத்துக்கு கையளிக்கப்படவில்லை.

நாட்டில் ஒருபோதும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படாது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பொய்யான வாக்குறுதிகள் தொடர்பாகக் கருத்துரைக்க விரும்பவில்லை.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுஜன பெரமுன நிச்சயம் வெற்றிபெறும். சஜித், சம்பிக்க, ரணில், அநுர மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்படுவது முற்றிலும் பொய்யானது. கொவிட் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு இராணுவத்தினர் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

இராணுவத்தினரது உதவியில்லாமல் கொவிட் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். தடுப்பூசி செலுத்தல் திட்டத்தை இராணுவத்தினர் நேர்த்தியான முறையில் முன்னெடுத்துள்ளார்கள்.

இலங்கையை பசுமை நாடாக உருவாக்குவதற்குத் தேவையான முக்கிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றை முறையானதாகவும், நிலையானதாகவும், செயற்படுத்துவதற்கு 'பசுமை விவசாய செயற்பாட்டு மையம்' ஒன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் பசுமை விவசாய செயற்பாட்டு மையம் செயற்படுத் தப்படவுள்ளது. அரசாங்கத்தின் சிறந்த திட் டங்கள் ஊடகங்களில் தவறான முறையில் சித்திரிக்கப்படுகின்றன.

சேதனபசளை திட்டத்தை பலவீனப்படுத்த திட்டமிட்ட வகையில் சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகின்றது. இரசாயன உரம் தடை செய்யப்பட்டபோது மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டது.

இரசாயன உரம் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மரக்கறிகளின் விலை சடுதியாக குறைவடைந்தது. சேதன பசளைத் திட்டத்துக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பவர்கள் இரசாயன உர பயன்பாட்டால் ஏற்படும் விளைவுகள் தொடர்பில் எவரும் கருத்துரைப்பதில்லை.

எதிர்வரும் காலங்களில் நாட்டில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்த்தரப்பினரும், ஆளும் தரப்பின் ஒருசில உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். எந்தக் காரணிகளுக்காகவும் உணவு தட்டுப்பாடு ஏற்படாது. பெரும்போக விவசாயம் நிச்சயம் வெற்றி பெறும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய பொய்யான வாக்குறுதிகள் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை. அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. – என்றார்.

## அமெரிக்காவுடனான யுகதனவி ஒப்பந்தத்தை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த முடியாது

### பந்துல திட்டவட்டம்



யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எதிர்த் தரப்பினர் குறிப்பிடுவதைப் போன்று கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்யவோ, ரத்து செய்யவோ முடியாது.

யுகதனவி விவகாரத்தில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் சர்வதேச சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், பொருள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான சேவைக் கட்டணங்களும் குறுகிய காலத்தில் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கு நிவாரண விலைக்கமைய அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதற்கு அரசாங்கம் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகப் பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை அரிசி உள்ளிட்ட 50 அத்தியாவசியப் பொருள்களை நுகர்வோர் நிவாரண விலையில் சதொச விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தம் முறையற்ற வகையில் கைச்சாத்திடப்படவில்லை. ஒப்பந்தம் தொடர்பிலான உள்ளடக்கங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதியுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்துக்கு 99 வருட கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்யவும், ரத்து செய்யவும் முடியாது. சர்வதேச ஒப்பந்த சட்டங்களுக்கு அமையவே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

யுகதனவி மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் நாட்டுக்கு எதிரான விடயங்கள் ஏதும் உள்ளடக்கப்படவில்லை.

குறுகிய அரசியல் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு அனைத்து அபிவிருத்தி திட்டங்களிலும் குறை கண்டால் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. – என்றார்.

# காணொலி முறையில் சீன– ரஷ்ய பேச்சு நாளை!



சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

நாளை (புதன்கிழமை) காணொலி முறையில் நடைபெறவுள்ள இந்த சந்திப்பொன்றின் போது, இருதரப்பு உறவுகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதிக்கவுள்ளனர்.

உக்ரைன் எல்லையில் ஏராளமான இராணுவ வீரர்களை ரஷ்யா குவித்துள்ளதையடுத்து, அந்த நாட்டுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையேபதற்றம்ஏற்பட்டுள்ளநிலையில்இந்தஉச்சிமாநாடுநடைபெறவுள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறுகையில், ‘பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவு, ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் பேச்சு மேற்கொள்வர்’ என கூறினார்.

சர்வதேச பொருளாதாரம் மற்றும் அரசியலில் அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு பதிலடி தரும் வகையில் சீனாவும் ரஷ்யாவும் தங்களது வெளியுறவுக் கொள்கைகளில் அண்மைக்காலமாக மாற்றங்களைச் செய்து வருகின்ற நிலையில் இந்த சந்திப்பு இடம்பெறுகின்றது.

ரஷ்யாவை போலவே சீனாவும் தனது உள்நாட்டு கொள்கைகள் காரணமாக அமெரிக்காவால் பொருளாதார தடைகளைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதல்முறையாக ஐக்கிய அரபு சென்றார் இஸ்ரேல் பிரதமர்



இஸ்ரேல் பிரதமர் நாப்டாலி பென்னட், ஐக்கிய அரபு அமீரகத்திற்கு உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

உள்ளூர் நேரப்படி ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கு இஸ்ரேலில் இருந்து நாப்டாலி பென்னட் தனது எல் அல் இஸ்ரேல் எயார்லைன்ஸ் விமானம் மூலம் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு புறப்பட்டுச் சென்றார் என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. பிரதமர் பென்னட்டின் செய்தித் தொடர்பாளர் இஸ்ரேலிய தலைவர் அபுதாபிக்கு வந்தமையை உறுதிப்படுத்தினார்.

அரபு நாடான ஐக்கிய அரபு அமீரகத்துக்குச் செல்லும் முதல் இஸ்ரேல் பிரதமர் நாப்டாலி பென்னட் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக வல்லரசுகள் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை புதுப்பிக்க முயற்சிக்கும் போது பிராந்திய பதற்றம் அதிகரித்த நேரத்தில் வளைகுடா உறவுகளை வலுப்படுத்த இஸ்ரேல் பிரதமர் முயலுகின்றார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சுற்றுப் பயணத்தின்போது ஐக்கிய அரபு அமீரக பட்டத்து இளவரசர் ஷேக் முகமது பின் ஸயீது அல்–நாஹ்யானை அபுதாபியில் சந்தித்து நாப்டாலி பென்னட் பேச்சு நடத்துவார் என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல் அவிவில் இருந்து புறப்படுவதற்கு முன், பென்னட், தானும் அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல்–நஹ்யானும் திங்கள்கிழமை சந்தித்து ஒத்துழைப்பை வலுப்படுத்துவது மற்றும் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி விவாதிப்போம் எனக் கூறினார்

கடந்த 2020ஆம் ஆண்டு முதல் பஹ்ரைன், சூடான் மற்றும் மொராக்கோவைத் தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகத்துடன் ‘ஆபிரகாம் உடன்படிக்கைகள்’ என்று அழைக்கப்படும் ஒப்பந்தத்துடன் இஸ்ரேல் நல்லுறவைப் பேணி வருகின்றது.

# உக்ரேனை ரஷ்யா ஆக்கிரமித்தால் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

## பைடன் எச்சரிக்கை



உக்ரேனை ஆக்கிரமிக்கும் இராணுவ நடவடிக்கையில் ரஷ்யா ஈடுபடுமானால் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.

இந்த நிலை ஏற்படும் பட்சத்தில், அமெரிக்க துருப்பினை தரைமார்க்கமாக உக்ரேனுக்கு அனுப்பி வைக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், இரண்டு மணிநேர உரையாடலின்போது, தெளிவாக இதனை தாம் வலியுறுத்தியுள்ளேன் என அமெரிக்க ஜனாதிபதி ஊடக சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரேனின் கிழக்கு பிராந்தியத் திற்கு ஐக்கிய நாடுகள் மற்றும் நேட்டோ படைப் பிரிவினரையும் நகர்த்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்தில் ஒமிக்ரோனின் முதல் மரணம்!



கொரோனாவின் புதிய திரிவான ஒமிக்ரோன் வைரஸால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் பிரித்தானியாவில் உயிரிழந்துள்ளார். இத்தகவலை பிரித்தானியப் பிரதமர் உறுதி செய்துள்ளார். கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட நோயாளியின் முதல் இறப்பு இதுவாகும்.

தென் ஆபிரிக்காவில் புதிய வகை உருமாறிய ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. அந்த வைரஸ் மற்ற உருமாறிய வைரஸ்களை விட வேகமாக பரவும் தன்மை கொண்டது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகளவில் இதுவரை 63 நாடுகளில் ஒமிக்ரோன் வைரஸ் பரவியுள்ள இந்த சூழலில், இங்கிலாந்தில் ஒமிக்ரோன் வைரஸ் தீவிரம் காட்டி வருவதால், அந்நாட்டில் எச்சரிக்கை அளவை உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் மாறுபாடு லண்டனில் தனியான விகிதத்தில் பரவியுள்ளது. இந்த தொற்று தற்போது சுமார் 40வீதம் நோய்த்தொற்றுகளுக்கு காரணமாக உள்ளது. இரட்டை தடுப்பூசி போடப்பட்டவர்கள் கூட இன்னும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றமையால், பூஸ்டர் டோஸ் தடுப்பூசிகளை எடுக்க மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே ஒமிக்ரோன் வைரஸ் பரவலை அடுத்து இங்கிலாந்தில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் விரைவில் ஒமிக்ரோன் பேரலை வீசும். அதை தடுப்பதற்காக ஏற்கெனவே போடப்பட்ட தடுப்பூசிகள் பாதுகாப்பு தராது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறும் போது 3 வதாக பூஸ்டர் டோஸ் எடுத்துக் கொண்டால் ஒமிக் ரோன் பாதிப்பு குறையும் என்று அறிவியல் உலகம் கூறுகின்றது. எனவே மக்கள் அனைவருக்கும் ஒரு மாத காலத்திற்குள் இன்னொரு பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. பூஸ்டர் டோஸ் போடாவிட்டால் ஒமிக்ரோன் பாதித்தவர்களை மருத்துவமனையில்தான் சேர்க்க வேண்டும்.

இப்போது நாம் அவசரநிலையில் இருக்கிறோம். ஒமிக்ரோனுடன் நமது போராட்டம் தொடங்கி விட்டது. இந்த நிலையில் 3ஆவது பூஸ்டர் டோஸ் போட்டால் ஒமிக்ரோனிடமிருந்து பாதுகாப்பு கிட்டும் என்று விஞ்ஞானிகள் கூறினாலும், இந்த நிலையில் ஒமிக்ரோன் தீவிரமானது அல்ல என்று அவர்களால் கூற முடியவில்லை.

ஏற்கெனவே தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் மத்தியில் ஒமிக்ரோன் படுவேகமாகப் பரவும் என்று விஞ்ஞான உலகம் நம்மை எச்சரிக்கிறது. 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு 3வது பூஸ்டர் டோஸ் அடுத்த வாரத்தில் தொடங்க உள்ளது.

அதாவது 2வது டோஸ் எடுத்துக் கொண்டவர்கள் அதை எடுத்துக் கொண்டு 3 மாத காலம் ஆகியிருக்க வேண்டும் அவர்களுக்குத்தான் பூஸ்டர் டோஸ்.

நாடு முழுதும் 42 இராணுவக் குழு அனுப் பப்பட்டு தடுப்பூசி பணியை விரைவில் நிறைவேற்றுவோம் என்று போரிஸ் ஜான்சன் கூறினார்.

# தமிழகத்தில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் நீடிப்பு புத்தாண்டை கடற்கரைகளில் கொண்டாடத் தடை



தமிழகத்தில் வருகிற 15 ஆம் திகதியுடன் கொரோனா ஊரடங்கு உத்தரவு காலம் முடிவடைய உள்ளதால் ஊரடங்கை நீடிப்பது குறித்தும், கொரோனா கட்டுப் பாடுகள் குறித்தும் தமிழக முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில் ஆலோ சனை மேற்கொண்டார்.

இந்தக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் இறையன்பு, வரு வாய் மற்றும் பேரிடர் மேலாண் மைத்துறை முதன்மை செய லாளர் குமார் ஜெயந்த், சுகாதாரத் துறை முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், பொதுத்துறைச் செயலாளர் ஜெகநாதன் உள்ளிட்ட உயர் அதி காரிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒமிக்ரோன் பரவல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

இதனையடுத்து, தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள கொரோனா நோய்த்தடுப்பு கட்டுப் பாடுகள் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறப்பித்துள்ளார்.

சமுதாய, அரசியல், கலாச்சார கூட்டங்கள் போன்ற பொதுமக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள தடை தொடரும் எனவும், கொரோனா நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் டிசெம் பர் 31 மற்றும் ஜனவரி 1 ஆகிய நாள்களில் அனைத்துக் கடற்கரை களிலும் பொதுமக்களுக்கு அனு மதி இல்லை எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே அனுமதிக்கப்பட் டுள்ள செயல்பாடுகள் உரிய கட்டுப்பாடுகளுடன் தொடர்ந்து அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒமிக்ரோன் தொற்றை சமாளிக்க தயார் டெல்லி முதல்வர் அரவிந்த் தெரிவிப்பு



டெல்லியில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் இருப்பினும் கட்டுப்பாடு விதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் முதன்முதலாக கடந்த 2ஆம்திகதி கர்நாடக மாநிலத்தில் தென்னா பிரிக்காவில் இருந்து வந்த ஒருவருக்கும், பெங்களூரு டாக்டர் ஒருவருக்கும் ஒமிக் ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து, மகாராஷ்டிரா, ராஜஸ் தான், குஜராத், டெல்லி, ஆந்திரா மற்றும் சண்டிகர் ஆகிய மாநிலங்களில் சுமார் 42 பேர்ஒமிக்ரோன்தொற்றால்பாதிப்படைந்து உள்ளனர். தற்போது கேரளாவிலும் ஒமிக்ரோன் வைரஸ் காலூன்றியுள்ளது.

இந்தநிலையில், டெல்லியில் ஒமிக் ரோன் தொற்று பாதிப்பு குறித்து டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஊடகங் களுக்குதகவல் வழங்கியுள்ளார். ஒமிக்ரோன் அச்சுறுத்தலைச் சமாளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். தேவைப்பட்டால், தேவையான கட்டுப்பாடுகளை விதிப்போம். தற்போது, எந்தக் கட்டுப்பாடும் விதிக்க வேண்டிய அவசியம் இல்லை. பாடசாலைகளுக்கு குளிர்கால விடுமுறை முடிந்ததும் அவற்றைத் திறப்பது குறித்து முடிவு செய்யப்படும், என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் ஒமிக்ரோன் பரவியதா? அமைச்சர் சுப்ரமணியன் விளக்கம்



திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவம னைக்குச் சென்ற தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரம ணியன் அங்கு செய்தி யாளர்களின்கேள்விகளுக் குப் பதிலளித்தார்.

ஒமிக்ரோன் பாதிப் புள்ள நாடுகளில் இருந்து வரும் பயணிகள் தீவிர மாக கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த நிலையில், நைஜீரியாவில் இருந்து வந்த 7 பேருக்கு நடத்தப்பட்ட பரிசோத னையில் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அதில், ஒருவருக்கு ஒமிக்ரோன் பாதிப்புக்கான வைரஸ் அறிகுறி கள் இருப்பதாக சந்தேகிக்கப்படு வதால், அவரின் மாதிரிகள் பெங்களூரு மரபணு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

பெங்களூருவில் இருந்து பரிசோதனை முடிவுகள் இன்றோ அல்லது நாளையோ தெரிய வரும். சந்தேகம் உள்ள 7 பேரும் சென்னை கிங்ஸ் மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள் ளனர், என்று அவர் தெரிவித்தி ருக்கிறார்.

# கர்நாடகாவில் ஏழைகளை குறிவைத்து மத மாற்றங்கள் நடைபெறுகின்றன

## அமைச்சர் சுனில் தெரிவிப்பு



கர்நாடகாவில் ஏழைகளை குறிவைத்து பெரிய அளவில் மத மாற்றங்கள் நடைபெறுகின்றன என்று கர்நாடக மாநில எரிசக்தி துறை அமைச்சர் சுனில் குமார் தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவையின் குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கியுள்ள நிலையில், சட்டப் பேரவை வளாகத்தில் ஊடகவி யளாளர்களைச் சந்தித்த மாநில எரிசக்தி துறை அமைச்சர் சுனில் குமார், பா.ஜ.க. ஆட்சியில் பசுவதை தடுப்பு மற்றும் மத மாற்ற தடைச்சட்டம் கொண்டு வருவது உறுதி என்று நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறோம்.நான் ஒரு படி மேலே சென்று கூறுகிறேன், லவ் ஜிகாத்துக்கு எதிராகவும் சட்டம் கொண்டு வருவோம், என்று தெரிவித்திருக்கிறார்.

கர்நாடகாவில் சில அமைப்பு கள் மத மாற்றத்தில் ஈடுபடவில்லை என்று பகிரங்கமாகக் கூறுகின்றன. மத மாற்றம் அவர்களின் நோக்கமல்ல என்றால், மத மாற்றத் தடைச் சட்டத்தை எதிர்ப்பது ஏன்? ஒரு புறம் மத மாற்றத்தில் ஈடுபடவில்லை என்கிறார்கள். மறுபுறம் அவர்கள் மசோதாவை எதிர்க்கிறார்கள். அவர்களே தெளிவற்ற நிலையில் இருக்கிறார்கள். நாங்கள் அல்ல.

கர்நாடக சட்டப்பேரவையில் தற்போது நடைபெற்றுவரும் குளிர்கால கூட்டத்தொடரில் மதமாற்ற தடுப்பு மசோதாவை தாக்கல் செய்ய பா.ஜ.க. அரசு தயாராகி வருகிறது. லவ் ஜிகாத்தை தடை செய்ய உத்தரபிரதேசத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசர சட்டம் குறித்த தக வல்களை சேகரிக்குமாறு கர்நாடக அதி காரிகளுக்கு அரசு ஏற்கனவே உத்தரவிட் டுள்ளது.

கர்நாடகாவில் ஏழைகளை குறிவைத்து பெரிய அளவில் மத மாற்றங்கள் நடைபெறு கின்றன. தூண்டுதல்கள் மூலம் நடைபெறும் இது போன்ற நடவடிக்கைகளை நிறுத்த சட்டம் கொண்டு வருவது அவசியம் என்று கருதப் பட்டது. எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையோ அல்லது சமூகத்தையோ அரசு குறி வைக்க வில்லை. அனைத்து சமூகத்தையும் மனதில் வைத்தே இந்த சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இந்த சட்டத்தை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதை காங்கிரஸ்தான் விளக்க வேண்டும். நாங்கள் அவர்களுடன் விவாதிக்க தயாராக இருக்கிறோம், என்று அமைச்சர் சுனில் குமார் தெரிவித்துள்ளார்.

# யூடியூபர் மாரிதாஸ் மீதானவழக்குரத்து



பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்த தாக யூடியூபர் மாரிதாஸ் மீது தொடரப்பட்ட வழக்கு ரத்துச் செய்யப் பட்டது.

இந்திய இராணுவ முப்படைத்தளபதி பிபின் ராவத் மரண விவகாரத் தில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்து பதி விட்டார் என தமிழகத் தைச் சேர்ந்த யூடியூபர் மாரிதாஸ் மீது வழக்குத் தொடரப்பட்டது.

அவர்தனதுடுவிட்டர் பக்கத்தில் மாநிலத்தின் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும், மாநில அரசுக்கு எதிராகவும் கருத்து ஒன்றை பதி விட்டுள்ளமையால் அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி வழக்கறிஞர் ராமசுப்ரமணியன் என்பவர் சைபர்கிரைம் பொலி ஸாரிடம் அளித்த புகாரில் 4 பிரிவுகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு 23 ஆம் திகதி வரை அவர் நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார்.

இந்தநிலையில் அவர்மீது வழக்குப் பதிந்தது செல்லாது என உயர்நீதிமன்றக் கிளை தெரி வித்ததோடு வழக்கையும் ரத்துச் செய்து உத்தரவிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகளால் முஸ்லிம் சமூகத்துக்கும் அவப்பெயர்

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் காட்டம்



பல்லின சமூகம் வாழும் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் மீது மாற்று மத சகோதரர்கள் தப்பெண்ணம் கொள்ளும் வகையில் செயற்பட்டு சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் வேலையை முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் கைவிட வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக் கையில் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரின் விருப்பத்துடன் தான் அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவிக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் தற்போது பரவலாகி வருகின்றது.

இக்கட்சிகளோடு நடந்த பேச்சுகளில் தானும் ஈடுபட்டமையால் அல்லாஹ் மீது ஆணையாக இதனை உறுதிப்படுத்துவதாக 20க்கு ஆதரவாக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 க்கு ஆதரவாக வாக்களித்ததற்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லி வருகின்றனர். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

20 க்கு ஆதரவாக வாக்களித்த தங்களது எம்.பிக்களை கட்சியிலிருந்து விலக்கியுள்ளோம். கட்சியில் வகித்த பதவிகளில் இருந்து அவர்களை விலக்கியுள்ளோம். என்று ஊடகங்களில் அறிக்கை விட்டதைத் தவிர இக்கட்சிகள் இவர்களுக்கெதிராக வேறு என்ன நடவடிக்கை எடுத்துள்ளன என்று கேட்க விரும்புகின்றேன்.

இன்று இந்நாட்டில் பெரும்பான்மை சமுகத்தினர் முஸ்லிம் சமூகத்தின் மீது தப்பெண்ணம் கொள்வதற்கும் விரோதமான கருத்துக்களை வெளியிடுவதற்கும் இந்த முஸ்லிம் கட்சிகளின் செயற்பாடுகள் தான் காரணமாக அமைந்துள்ளன.தங்களது சுயநலத்துக்காக சமுகத்திற்கு அவப்பெயரை உருவாக்குவதை இந்த முஸ்லிம் கட்சிகள் முதலில் கைவிட வேண்டும். தேர்தல் மேடைகளில் ராஜபக்ஷ குடும்பத்திற்கும், மொட்டுக்கட்சிக்கும் திட்டித்தீர்த்து தான் இக்கட்சிகள் ஆசனங்களைப் பெற்றன. அப்போது கசப்பாக இருந்த மொட்டுக் கட்சியும், ராஜபக்ஷ குடும்பமும் இப்போது இனிப்பதற்கு காரணம் என்ன என்பதை சகல மக்களுக்கும் இவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும் போதே நிதியமைச்சர் கடன்கேட்டு இந்தியா பயணம்

## கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு



வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச்செல்லும்நிலைமை தான் தற்போது நாட்டில் இருக்கின்றது. ஒரு தேர்தலை வைக்கக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார். இன்று மட்டக்களப்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு தற்போது நான்கு வருடங்களுக்கு மேலாகின்றது. வடக்கு மாகாணசபையும் கலைக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகின்றது. அதேபோன்று அனைத்து மாகாணசபைகளும் கலைக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை, சுகாதார நிலைமை என்பன வெளிப்படையான விடயம்.

நாட்டின் வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவிற்குச் செல்லும் நிலைமை தான் நாட்டின் தற்போதைய நிலையாக இருக்கின்றது. வரவு – செலவுத் திட்ட விவாதம் நடக்கும் போது நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்க வேண்டிய நிலையில் அவர் கடன் கேட்டு வெளிநாடு செல்கின்றார்.

கடந்த வருடம் இந்த நாட்டை விட படுமோசமாக இருந்த பங்களாதேஷிடம் இலங்கை அரசாங்கம் கடன் வாங்கியிருக்கின்றது. இந்த நிலையில் மாகாணசபைத் தேர்தலையோ இன்னுமொரு தேர்தலையோ வைக்கக்கூடிய நிலைமை இந்த அரசாங்கத்திடம் இல்லை.

வருகின்ற வருடம் மார்ச் மாதத்துடன் உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படலாம். சிலவேளைகளில் தேர்தல் நடத்த முடியாவிட்டால் உள்ளூராட்சி சட்டத்தின் படி ஒரு வருடங்கள் நீடிக்கக் கூடிய நிலைமையும் ஏற்படலாம் அல்லது உள்ளூராட்சி மன்றங்களையும் கலைத்து விட்டு உறுப்பினர் களுக்கான நிதியையும் மீதப்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஆணையாளர், செயலாளர்களுக் குக் கீழ் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங் களைக் கொண்டு வரலாம். எதுவும் எந்த நேரமும் நடக்கும். ஆனால் ஒரு தேர்தலை வைக்கக் கூடிய நிலைமையில் இந்த அரசாங்கம் பொருளாதார ரீதியாகவும் இல்லை, அரசியல் ரீதியாகவும் பலமிழந்த நிலையில் இருக்கின்றது. அந்த விடயம் அரசாங்கத்திற்கே தெரியும். ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் இருக்கின்ற சில அமைச்சர்கள் கூட இதனை ஒத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையில் அரசாங்கம் தேர்தலுக்குச் செல்லாது.

எனவே இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் படி 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு எவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தனவோ அந்த அதிகாரங்கள் அனைத்தையும் உள்வாங்கி அதிகாரங்களைப் பரவலாக்கி இந்த மாகாணசபைத் தேர்தல் வைக்கப்படல் வேண்டும். அவ்வாறான தொரு நிலைமை வருமாக இருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வரும் என்று தெரிவித்தார்.

# சாணக்கியனை பகிரங்க விவாதம் ஒன்றிற்கு அழைக்கிறார் நசீர்

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களுக்கும் காணிப்பிரச்சினை இல்லை. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பிள்ளையானுடன் சேர்ந்து காணிப்பிரச்சினை தொடர்பில் நாடகம் ஆடுகிறார்கள் என்று தாங்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பிலேயே உங்களுடன் பகிரங்க விவாதத்தை நடாத்த நான் தயாராக இருக்கின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகளுக்கு நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அநீதிகள் குறித்தும் சட்டத்திற்கு முரணாக முஸ்லிம் பிரதேச செயலகங்களின் காணி எல்லைகள் கபளீகரமாக பறிக்கப்பட்டது தொடர்பிலும், அரச அதிகாரிகள் சிலர் முஸ்லிம் பிரதேசங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் மேற்கொண்ட ஓரவஞ்சனையான செயற்பாடுகள், முஸ்லிம்கள் இழந்த காணிகள், இழந்த கிராமங்கள் மற்றும் முஸ்லிம் பிரதேச காணிகள் கபளீகரம் செய்யப்பட்டமை தொடர்பிலுமே உங்களுடன் பகிரங்க விவாதம் ஒன்றை நடாத்த இந்த அழைப்பு விடுக்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் மாவட்ட முஸ்லிம்களுக்கு காணி தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளை இந்நாட்டு மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய தேவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் குறித்து உங்களுடைய அறியாமையை உங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் இது தொடர்பாக திறந்த வெளியில் உங்களுடன் விவாதிக்கும் வகையில் உங்களது சம்மதத்தை நான் எதிர்பார்ப்பதுடன் அதற்குரிய இடம், பொருத்தமான நேரம் தொடர்பில் இருவரும் கலந்தாலோசித்து இந்த பகிரங்க விவாதத்தை நடத்த வேண்டும் என்றார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலக சேவைகள் யாவும் தொழில்நுட்ப வசதிகளுடன் விரைவுபடுத்தல்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகளை தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் விரைவுபடுத்த அரசாங்க அதிபர் கே. கருணாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார். இம்முறை இடம்பெற்ற தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் விசேட பாராட்டு விருதினை பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து கிளைத்தலைவர்களுக்கிடையிலான உற்பத்தித்திறன் மேம்பாட்டு மீளாய்வுக் கூட்டம் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கே. கருணாகரன் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இவ்வாறு வழங்கப்பட்ட பயிற்சிகளின் அடிப்படையில், இருக்கும் மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி தகவல் தொழில்நுட்ப வசதிகளின் ஊடாக உச்சகட்ட வினைத்திறனான சேவைகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்பத்தித்திறன் மேம்பாட்டு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்மீளாய்வுக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், பிரதம கணக்காளர் கே. ஜெகதீஸ்வரன், மாவட்ட செயலகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், தகவல் தொழில்நுட்ப பிரிவு உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்ன மாகியிருந்தனர்.

# அம்பாறை – காரைதீவு பிரதேச சபை பாதீடு 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட அம்பாறை – காரைதீவு பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தவிசாளர் கி.ஜெயசிறிலினால் குறித்த பாதீடு இன்றைய தினம் முன்வைக்கப்பட்டிருந்தது.

12 உறுப்பினர்களைக் கொண்ட காரைதீவு பிரதேச சபையில் 7 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாகவும், 5 பேர் எதிர்த்தும் வாக்களித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை குழு உறுப்பினர் ஒருவரின் ஆதரவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டை சபையில் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ் மக்களினது அரசியல் தொடர்பில் சாணக்கியர்களுக்கு தெளிவு வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சாட்டை



இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் பட்டம் வழங்கிக்கொள்பவர்கள், அதற்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அவர்களுக்கு தமிழர்களின் இன்றைய யதார்த்தநிலை புரியவேண்டுமென்பதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தொடர்பில் தெளிவு வேண்டும் என்றும் தனது அறிக்கையின் ஊடாகவலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

1987 ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையின் அரசியல் யாப்பில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதுவே இப்பொழுது அனைவராலும் பேசப்படும் 13 ஆவது திருத்தமாகும். 13 ஆவது திருத்தம் வந்ததைத் தொடர்ந்து இலங்கையில் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வடக்கு –கிழக்கு இணைந்த ஒரு மாகாணமாகவும் ஏனைய ஏழு மாகாணங்களை உள்ளடக்கி எட்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. இந்திய –இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக டெல்லியில் தமிழ் தரப்புகளுடனான பேச்சில் வடக்கு–கிழக்கு என்பது எப்போதும் இணைந்திருக்கும் என்ற உறுதிமொழியின் அடிப்படையிலேயே தமிழர் தரப்புகள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. பின்னர், 13 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தபொழுது இந்தியாவுடனோ தமிழர் தரப்புகளுடனோ சரியான பேச்சுகளை நடத்தாமல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தான் விரும்பியவாறு அரைகுறை அதிகாரப்பரவலாக்கலுடன் தமக்கு இருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பயன்படுத்தி அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றினார்.

அப்பொழுது வடக்கு – கிழக்கு இணைந்த மாகாணசபையை உருவாக்கிய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 13 ஆவது திருத்தத்தில் இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி அவை எவ்வாறு திருத்தப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஓர் ஆவணத்தைத் தயார்செய்து அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் அனுப்பிவைத்தது. அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கமும் பதின்மூன்றில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ராஜீவ்காந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆகவே, 13 ஆவது திருத்தம் என்பது முழுமையான அதிகாரப்பகிர்வு அல்ல என்பதைத் தமிழர் தரப்பு அன்றே ஏற்றுக்கொண்டது. ஆனால் அது ஒன்று மாத்திரம்தான் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சட்டபூர்வமான, அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரமாக இருக்கின்றது. அதனை நடைமுறைப்படுத்தும்படிதான் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய பல கட்சிகளால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

1950 களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாகியபொழுது, தந்தை செல்வா தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தார். 1976 ஆம் ஆண்டுவரையில், அவரது சமஷ்டி கோரிக்கையில் எத்தகைய முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. தந்தை செல்வாவிற்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் அரசதரப்பால் கிழித்தெறியப்பட்டன. இதன் காரணமாக பிரித்தானியரிடம் தமிழர்கள் இழந்த இறையாண்மையை மீளப்பெறுவதற்கான தமிழர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எத்தகைய பொறிமுறைகளோ, திட்டங்களோ, மூலோபாய, தந்திரோபாயங்களோ அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினிடம் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், அழிப்புகளும் தமிழ் இளைஞர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தூண்டியது. இதன் காரணமாக, பல்வேறுபட்ட ஆயுத அமைப்புகள் தோற்றம் பெற்று, தமிழின விடுதலைக்காகப் போராடின.

இந்த வரலாற்றைப் புரிந்துகொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விருப்பமில்லாதவர்கள், தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் என்று ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டும் புகழாரம் சூட்டிக்கொண்டும் தவறான கருத்துக்களையும் அணுகுமுறைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கின்றனர்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி சில கட்சித் தலைவர்கள் பேசுகின்றனர் எனவும் மஹிந்த ராஜபக்ஷவே 13 ஆவது திருத்தத்துக்கு மேலே சென்று இந்த பிரச்சினையைத் தீர்ப்பேனென்று பலமுறை கூறினார் எனவும் ஆனால் அவற்றையெல்லாம் மறந்துபோன சில தமிழ்த் தலைமைகள் பதின்மூன்றை நிறைவேற்றும்படி இப்பொழுது கோரிக்கைகளை முன்வைக்கின்றமை என்பது தமிழருக்குச் செய்யும் 'துரோகம்' என்றும் இந்த சாணக்கியர்கள் 11.12.2021 அன்று சுன்னாகத்தில் நடந்த சாணக்கியர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் கூறியுள்ளனர். இதே விடயத்தை இவர்கள் லண்டனிலும் தெரிவித்திருந்தனர்.

மாகாணசபைகளுக்கு அரசியல் சாசன ரீதியில் வழங்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொண்டு அதன் பிறகு சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் அரசியல் தலைமைகளின் இன்றைய நிலை. ஆனால் அரசாங்கம் அதனையே நடைமுறைப்படுத்த முடியாதென பிடிவாதம் பிடிக்கிறது. இந்த நிலையில் இந்த சாணக்கியர்களும் பதின்மூன்றை ஏற்கமாட்டோம் என்று கூறுகின்றமை இவர்கள் யாருடைய நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது.

இந்த சாணக்கியர்களின் சாணக்கியத்தை சற்றே திரும்பிப்பார்ப்போம்.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்தவுடன் அவசர அவசரமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளை சூட்டோடு சூடாக பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது மக்கள் அனுபவித்த கொடுமைகளை நேரடியாகவே கேட்டறிந்தமையுடன், இது தொடர்பில் ஐ.நாவிற்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் கொடுப்பதற்காக விரிவான அறிக்கை ஒன்றையும் தயார் செய்திருந்தனர். இதனைக் கையளிப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஐ.நாவிற்குச் செல்லுமென்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று கூட்டமைப்பின் பேச்சாளராகவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாகவும் இருந்த நான் இலங்கைக்கு வெளியில் இருந்த நேரத்தில் அமெரிக்கா ஜெனிவாவிற்குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க தமது பயணத்தை ஒத்திவைத்தேன் என தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் தன்னிச்சையாக அறிவித்தார். ஆயினும் அதனை ஏற்க மறுத்து நாம் ஜெனிவா சென்று பல நாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்து மக்களின் நிலை பற்றித் தெளிவுபடுத்தினோம்.

2015 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்காளியாகத் திகழ்ந்த ரணில் – மைத்திரி கூட்டு அரசாங்கத்தைக் காப்பாற்றும் பொருட்டு, ஐ.நாவால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட காத்திரமான தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்வதில் முனைப்புடன் செயற்பட்டவர்கள் இந்த சாணக்கியர்கள். இதற்கு இவர்கள் சொன்ன காரணம் விசித்திரமானது. சர்வதேச விசாரணை ஏற்கனவே முடிந்துவிட்டது. இனி அதனை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டியதுதான் வேலை. எனவே, நாம் பொறுமையுடன் இருந்து அதற்கான காரியம் ஆற்ற வேண்டும் என்று கூறியமையுடன் சர்வதேச விசாரணையில் உள்ளூர் நபர்களும் இருப்பார்கள். அதே போன்று உள்ளக விசாரணைகளிலும் சர்வதேசத்தவர்களும் இருப்பார்கள் என்று வியாக்கியானம் அளித்தவர்கள். 2015 ஆம் ஆண்டின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டாண்டுகள் அவகாசத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு, பின்னர் மீண்டும் 2017 இல் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் கால அவகாசம் வழங்க வேண்டும். அதன் மூலம்தான் நாம் அதனை சர்வதேசத்தின் பிடியில் வைத்திருக்க முடியும் என்று சொல்லி மீண்டும் காலநீடிப்பைப் பெற்றுக்கொடுத்தவர்கள் இவர்கள்.

2018 ஆம் ஆண்டில் அடுத்த சில மாதங்களில் புதிய அரசியல் யாப்பு வரப்போகின்றது. அதில் ஈழம் என்ற சொல்லைத் தவிர ஏனைய அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று கூறியமையுடன் இந்த நேரத்தில் காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது என்று சொல்லி அன்றைய அரசாங்கத்தைக் காப்பாற்றியவர்கள். அன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பின் நகலை அனைவரும் அறிவோம். இதற்கு சமஷ்டிக்குள்ளும் ஒற்றையாட்சி அடங்கியிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்ளும் சமஷ்டி ஒளிந்திருக்கிறது என்று வியாக்கியானம் கூறியவர்கள்தான் இன்று தமிழ்த் தலைமைகளை விமர்சிக்கின்றனர்.

புதிய அரசியல் சாசன வரைவு தொடர்பில் நாம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் வடக்கு–கிழக்கு இணைப்பை முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, நாங்கள் அதுபற்றிப் பேசவில்லை என்றும் வடக்கு – கிழக்கை மதச்சார்பற்ற பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று கோரினால் சிங்கள பௌத்த மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும். ஆகவே, அந்த விடயங்கள் தொடர்பாகப் பேசவில்லை என்றும் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பதில் சொல்லப்பட்டது.

யுத்தத்துக்குப் பிற்பாடு வந்த முதலாவது நாடாளுமன்றத்தில், மஹிந்தராஜபக்ஷ அரசுடன் பதினெட்டு சுற்றுப் பேச்சுகளை நடத்தினோம். அந்தக் கூட்டங்கள் தோல்வியிலேயே முடிந்தன. ரணில் –மைத்திரி ஆட்சியில் பங்காளியாக இருந்துகொண்டு ஒவ்வொரு வருடமும் புதிய அரசியல் சாசனம் வருமென்றும் பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு என்று உறுதிமொழி வழங்கிவந்தீர்கள். ஆனால் அவை அனைத்தும் தோல்வியில் முடிந்தன. இப்பொழுது கோட்டாபய அரசுடனும் பேசுவதற்கு முயற்சிக்கின்றீர்கள். ஆனால், சிங்கள பௌத்த தீவிரவாத எண்ணங்களைக் கொண்ட கோட்டாபய அரசு அதற்கான நேரத்தை இன்னமும் உங்களுக்கு ஒதுக்கவில்லை. ஆனாலும் அவர்களுடன்கூட நீங்கள் பேசுவதற்குத் தயாராகத்தான் இருக்கின்றீர்கள். இப்பொழுது இறுதியாக நீங்கள் அமெரிக்கா, கனடா, லண்டன் போய்வந்து '2022 இல் மாற்றங்கள் நிகழலாம்…ம்…ம்' என்று கயிறு திரிக்கிறீர்கள். இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகள் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அதற்குப் பின்னர் நடந்த யுத்தத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் ஆயுதப்போராட்டத்தை ஏற்காத நீங்களே இப்பொழுது அவர்களைத் துணைக்கு அழைக்கிறீர்கள். ஒரு லட்சம்பேர் கொல்லப்பட்டனர் எனச் சொல்லும் நீங்கள் ஓர் இனவழிப்பு நடந்ததாகச் சொல்ல முடியாதென்றும் சொல்கிறீர்கள். இந்த சாணக்கியர்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவை மேவி வேறு எந்தவொரு நாடும் தலையிடாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வரவிருக்கின்ற புதிய அரசியல் சாசனத்தில் பதின்மூன்று முற்றாகவே நீக்கப்படலாம் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. ஆகவே எமக்குக் கிடைத்த அதிகாரங்களை விட்டுக்கொடுப்பது என்ற முட்டாள்தனத்தை நாங்கள் செய்ய இயலாது. செய்யக்கூடாது.

கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று இதுவரை காலமும் கூறி, மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த இந்த சாணக்கியர்கள், இப்பொழுது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தை ஏற்கமாட்டோம் என்று கூறுகின்றமை இவர்களது சுயமுரணைக் காட்டுகிறது.

இவர்களின் செயற்பாடுகள் இவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலையும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனாவாதிகளின் நிகழ்ச்சிநிரலையும் முன்னெடுத்துச் செல்லும் தரகர்களாகவே முன்னிலைப்படுத்தியிருக்கிறது.

எனவே, எமது மக்கள் இத்தகைய அரசியல் தரகர்களிடம் விழிப்புடன் செயற்பட்டு எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். – என்றார்.

# மருந்து, உணவுப் பொருள் இறக்குமதிகளுக்கு தேவையான நிதியை இந்தியாவிடம் கோருங்கள்

## அரசை வலியுறுத்துகிறார் ஹர்ஷ



இந்தியா ஒருபோதும் இலங்கையைக் கைவிடாது. இலங்கை மக்கள் உணவின்றித் தவிக்கும் நிலை வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காது.

எனவே மருந்து, உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதிக்கான நிதியை இந்தியாவிடம் கோருமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடுவதற்கு இப்போது தீர்மானித்துள்ளமை காலம் கடந்த ஞானமாகும்.

ஒரு வருடத்துக்கு முன்னரே இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தால் நாட்டில் இந்தளவிற்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா இல்லையா என தீர்மானித்துள்ளமை காலம் கடந்த ஞானமாகும். தற்போது இந்த தீர்மானத்தை எடுத்துள்ளமை பிரயோசனமற்றது.

காரணம் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கு தீர்மானித்தாலும் வரையறுக்கப்பட்ட சலுகைகளே கிடைக்கப் பெறும்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அடுத்த ஆண்டு செலுத்தப்பட வேண்டியுள்ள அனைத்துக் கடன் தொகையையும் செலுத்த முடியும் என்று கூறுகின்றார்.

ஆனால், தற்போது அரசாங்கத்திடம் 100 கோடி டொலர் கூட டொலர் வடிவில் கையிருப்பில் இல்லை. கடந்த மாத இறுதியில் 100.9 கோடி டொலர் இருப்பு காணப்பட்டது. ஆனால் ஜனவரியில் 144 கோடி டொலர் கடன் தவணை மற்றும் வட்டி என்பவற்றை செலுத்த வேண்டியுள்ளது.

இது தவிர, சர்வதேச பிணைமுறி, அதற்கான வட்டியையும் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கை அபிவிருத்தி பிணைமுறி கடன் 20 கோடி டொலர் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இது தவிர உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு 52.5 கோடி டொலர் கடனை செலுத்த வேண்டியுள்ளது.

அத்தோடு உள்நாட்டு வங்கிகளிடம் பெற்றுக்கொண்ட கடன் தொகையில் 14 – 15 கோடி டொலரை செலுத்த வேண்டியுள்ளது.

எனவே தற்போதுள்ள அந்நிய செலாவணி இருப்பை அரசாங்கம் இந்த கடன்களை செலுத்துவதற்கு பயன்படுத்தப்போகிறதா? அல்லது அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு பயன்படுத்தப்போகிறதா? இந்த நெருக்கடி மாத்திரமன்றி டொலர் இன்மையால் 1,500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

அரசாங்கம் கடனை செலுத்துவதற்காக டொலரை மீதப்படுத்தி, மக்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

அரசாங்கத்தினால் உரிய காலத்தில் கடனை மீள செலுத்த முடியாது. அவ்வாறு செலுத்தாவிட்டால் பிணைமுறி தொடர்பான நியுயோர்க் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டால் 140 கோடி டொலரை ஒட்டுமொத்தமாக ஒரே சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டியேற்படும்.

எனவே கடன் மீள் செலுத்தலை தொடர்ந்தும் காலம் தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டாம் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

செலுத்த வேண்டியுள்ள கடன் தொகையை மீள் புதுப்பிக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் உரிய காலத்தில் கடனை மீள செலுத்த முடியாது.

இவ்வாறு செய்வதன் ஊடாக மருந்து மற்றும் உணவுப் பொருள்கள் இறக்குமதிக்கான பணத்தை மீதப்படுத்த முடியும்.

நாட்டுக்கு மக்களின் நலனுக்காக இவ்வாறான விடயங்களில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க நாம் தயாராக உள்ளோம். மக்களைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் போராடுவோம்.

கடந்த 8 மாதங்களுக்கு முன்னரே சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் இந்தளவு நெருக்கடி ஏற்பட்டிருக்காது. சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வது தொடர்பில் இன்று பேச்சுகளை முன்னெடுத்துள்ள அரசாங்கம் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்காமலிருந்தமைக்கான காரணம் என்ன? அரசாங்கத்தின் இயலாமை, அறிவின்மையால் ரூபாவின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் தற்போது அதற்கு நாம் பொறுப்புக்கூற வேண்டும் என்று எம்மீது குற்றஞ்சுமத்துகின்றனர்.

முடியவில்லை என்றால் ஆட்சியை எம்மிடம் ஒப்படை வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியிடம் இயலுமை, வேலைத்திட்டம், சர்வதேச தொடர்புகள் உள்ளன. எம்மால் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை முற்றாக மீட்க முடியும் என்ற 100 வீத நம்பிக்கை எமக்கிருக்கிறது. – என்றார்.



# பொரளையில் நகைக் கடை கொள்ளை 5 சிறப்பு பொலிஸ் குழுக்கள் விசாரணை

கொழும்பு – பொரளையில் தங்க நகைக் கடையொன்று ஆயுதம் தரித்த அடையாளம் தெரியாத கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் 5 சிறப்பு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

பொரளை பொலிஸார், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் கொழும்பு தெற்கு வலய குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளை உள்ளடக்கிய 5 பொலிஸ் குழுக்களே இந்த விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளன என அறிய முடிகிறது.

கொள்ளையர்கள் கொள்ளைக்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் இலக்கம் மற்றும் அது தொடர்பான தகவல்கள், சி.சி.ரி.வி. காணொலி உள்ளிட்ட அறிவியல் தடயங்களை மையப்படுத்தி இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும், மிகவிரைவில் சந்தேகநபர்களை அடையாளம் காணக் கூடியதாக இருக்கும் எனவும் விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த விசாரணைகளைக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.ஜே. நந்தன மேற்பார்வை செய்யும் நிலையில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா வழி நடத்துகின்றார். அவர்களின் கீழேயே இந்த 5 பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

பொரளை சந்தியை அண்மித்த, பொரளை – மருதானை வீதியில் அமைந்துள்ள தங்க நகைக் கடையில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.50 மணியளவில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வானை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நகைக் கடையில் இருந்தோரை அச்சுறுத்தி இக்கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

கொள்ளையிடப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி, உறுதியாக மதிப்பிடப்படாத போதும், கொள்ளையர்கள் சுமார் 5 பெட்டி நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் அவற்றின் பெறுமதி 30 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

# அதிகாரப் பரவலை நடைமுறைப்படுத்துவதே சிறுபான்மையினரை பாதுகாக்க ஒரே வழி

## ஹக்கீம் தெரிவிப்பு



ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மத்திய அரசாங்கம் எடுக்கும் கபளீகர செயற்பாடுகளை முழுமையாக முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாயின், அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

மாகாண சபைகள் இயங்காதுள்ள தருணத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஜனாதிபதி செயலணி என்ற போர்வையில் மத்திய அரசாங்கம் பல்வேறு செயலணிகளை அமைத்து சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு எத்தனிக்கும் கபளீகர நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றால் அரசமைப்பில் உள்ள அதிகாரப் பகிர்வு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்கு தேர்தல் முறைமையில் இருக்கின்ற மாற்றத்தை ஒரு சாட்டாகக் கூறிக்கொண்டு தேர்தலை இழுத்தடிப்பு செய்வதை இனியும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அதேபோல் ஆளுநர்களின் தலைமையில் மாகாண ஆட்சியை நடத்திக் கொண்டு, அதன் மூலமாக அரசாங்கத்தின் திட்டமிட்ட மறைமுக நிகழ்ச்சி நிரலை சிறுபான்மை சமூகத்துக்குப் பாதிப்பாக நடைபெறுகின்ற விடயங்களிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். அதன் அடிப்படையில் சிறுபான்மைச் சமூகம் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக நாட்டின் சகல கட்சிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை, 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் இந்திய தலைமைகளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் சரிவர நிறைவேற்றப் படுவதில் தாமதம் இருக்கின்றது.

எனவே, இவற்றையெல்லாம் தாமதப்படுத்தாது அமுல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2021இல் வெளியிடப்பெற்றது.